செ.வெ.எண்: 681 நாள்: 12.10.2019

**Voters helpline App செயலி மற்றும் இணையத்தின் மூலம் பொதுமக்கள் வாக்காளர் பட்டியல் குறித்து குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை சரிபார்த்து மாறுதல்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம்.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

Voters helpline App செயலி மற்றும் இணையத்தின் மூலம் பொதுமக்கள் வாக்காளர் பட்டியல் குறித்து குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை சரிபார்த்து மாறுதல்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது

இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணைப்படி 2020 ஆம் ஆண்டிற்கான புகைப்பட வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி 01.09.2019 முதல் துவங்கப்பட்டுள்ளது. வாக்காளர் சரிபார்க்கும் நிகழ்வு (Electors Verification Programme) புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஆறு சட்டமன்ற தொகுதிகளுக்குரிய அனைத்து பகுதிகளிலும் 01.09.2019 முதல் நடைபெற்று வருகிறது.

வாக்காளர் சரிபார்க்கும் நிகழ்வு தொடர்பாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கென பிரத்யேகமாக Voters helpline App எனும் செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. வாக்காளர்கள் தங்களுடைய கடவுச்சீட்டு, ஆதார் அட்டை, ஓட்டுநர் உரிமம், குடும்பஅட்டை, வருமான வரிதுறையினரால் வழங்கப்படும் அட்டை இவற்றில் ஏதேனும் ஒன்றின் நகலை வாக்குச்சாவடி நிலை அலுவலரிடம் அளித்து செயலியின் மூலம் தங்களது மற்றும் தங்கள் குடும்பத்திலுள்ள வாக்காளர்களின் விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம்.

இந்திய தேர்தல் ஆணையத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட செயலிகளான www.nvsp.in எனும் இணைய சேவை, Voter Helpline எனும் செயலி, பொது சேவை மையம், வாக்காளர் உதவி மையம், கட்டணமில்லா சேவை 1950 ஆகியவற்றின் மூலம் அனைத்து வாக்காளர்களும் தங்களது குடும்ப உறுப்பினர்களினுடைய விவரங்களை சரிபார்ப்பதுடன், குடும்ப உறுப்பினர்களை ஒன்றிணைத்து தகவலினை பதிவேற்றம் செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் செய்ய வேண்டியது உங்கள் புகைப்பட அடையாள அட்டையின் எண்ணைக் கொண்டு www.nvsp.in இல் பதிவு செய்யுங்கள். உங்கள் பெயர், பிறந்த தேதி, பாலினம், உறவின் முறை பெயர், முகவரி மற்றும் புகைப்படத்தை சரிபார்க்கவும். பிழையிருப்பின் அல்லது உங்கள் விவரங்கள் மற்றும் புகைப்படம் மாற்றம் இருப்பின் சரியான தகவல்களை அளியுங்கள். அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு அடையாள ஆவணத்தை பதிவேற்றம் செய்யுங்கள்.

புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள அனைத்து பொதுமக்களும் தாங்கள் மற்றும் தங்களது குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை மேற்காணும் செயலி மற்றும் இணையத்தின் மூலம் சரிபார்த்து, உரிய மாறுதல்களை பதிவேற்றம் செய்து கொள்ளுமாறும், மாற்றுத்திறனாளி வாக்காளர்களும் தாங்கள் மற்றும் தங்களது குடும்ப உறுப்பினர்களின் விவரங்களை மேற்காணும் செயலி மற்றும் இணையத்தின் மூலம் சரிபார்த்து, உரிய மாறுதல்களை பதிவேற்றம் செய்து கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி. இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**